# கொள்கை அறிக்கை

## பொதுத் தேர்தல் 2020

ஐக்கிய தேசியக் கட்சி

ஐக்கிய தேசியக் கட்சி

# பாராளுமன்றத் தேர்தலுக்கு இன்னும் சில வாரங்களே எஞ்சியுள்ளன.

வீடுகளில் பற்றாக்குறை. எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற முடியாதளவு சிரமம். தொழில், வருமான வழிகளில் தடங்கல். ஒருவேளை உணவுக்காக பாடுபடும் ஏழைகள் முதல் பாரியளவில் வருமானம் ஈட்டும் செல்வந்த வர்த்தகர்கள் வரை அனைவரும் மோசமான பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளனர்.

ஆட்சியாளர்கள் கொரோனா தொற்றின் மீது அனைத்தையும் சுமத்தி அதன் மூலம் தப்பிக்கும் தந்திரோபாயத்தில்.

உண்மையில் கூறவேண்டுமானால் இடம்பெற்றது வேறொன்று. இந்த அரசாங்கத்தின் தொலை நோக்கற்ற நிதி முகாமைத்துவத்தால் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளது.

# குழப்பத்தின் ஆரம்பம்

குடும்பமும் பொருளாதாரமுமே மக்களுடைய வாழ்க்கையின் முதல்படி. கருவேப்பிலையில் இருந்து சொகுசு இலத்திரனியல் உபகரணம் வரை சகல நுகர்வுப் பொருட்களினதும் விலை உயர்ந்துள்ளதால் ஒவ்வொரு குடும்பங்களின் பொருளாதாரமும் வீழ்ச்சியடைந்துள்ளது. குடும்பத்தின் பசியைப் போக்க முடியாதளவுக்கு சமயலறை வெற்றிடமாகியுள்ளது. ஊழியர்களின் ஊதியத்தை கொடுக்க முடியாதளவுக்கு நிறுவனங்கள் பின்தங்கியுள்ளன.

அரச ஊழியர்களின் கொடுப்பனவுகளும் தவிர்க்கப்பட்டுள்ளன. புத்தாண்டு கொண்டாட்டங்களுக்கான அடிப்படை ஊக்கத்தொகையும் அவர்களுக்கு கிடைக்கவில்லை. தனியார் நிறுவனங்களில் பணியாற்றும் ஊழியர்களின் கொடுப்பனவுகளும் தவிர்க்கப்பட்டுவிட்டன. பெரும்பாலான நிறுவனங்களால் முழுச் சம்பளத்தையும் கொடுக்க முடியாத நிலைமை.

தொழிற்சாலைகள் செயலிழந்துள்ளன. இறக்குமதித் தடையால் வர்த்தகங்களும், பல நிறுவனங்களும் இன்று வீழ்ச்சியை நோக்கியுள்ளன. சுயதொழில்கள் இன்று அனர்த்தத்தில். மத்திய கிழக்கு நாடுகளின் பல்லாயிரக் கணக்கான தொழில்கள் இழக்கப்பட்டு வருகின்றன. விவசாயம் மற்றும் வேறு தொழில்களில் ஈடுபடுவோரின் வருமானம் குறைவடைந்த வண்ணமுள்ளது. சுற்றுலாத்துறையை மீண்டும் எப்போது கட்டியெழுப்ப முடியும் என்பதை குறைந்தபட்சம் அனுமானிக்கக்கூட முடியாத நிலைமை. பிரதானமான ஏற்றுமதி வர்த்தகம் அற்றுப்போயுள்ளது.

இதன் காரணமாக வெளிநாட்டு அந்நிய செலாவணியை ஈட்டும் வருமான வழிகளும் முடங்கியுள்ளன.

# தொடர்
# குழப்பம்

சுருக்கமாகக் கூறுவதானால் முழு நாட்டினதும் பொருளாதாரம் அபாயகரமான நிலைக்கு இழுத்துச் செல்லப்படுகிறது.

இந்த சகலவற்றினதும் பெறுபேறாக வாழ்க்கைச் செலவு தாங்கிக்கொள்ள முடியாத அளவுக்கு உயர்ந்துள்ளது.

வறுமை வாட்டுகிறது. தனிநபர் வருமானம் வீழ்ச்சியடைந்துள்ளது. 2021 ஆம் ஆண்டளவில் ஒரு மில்லியனுக்கு மேற்பட்டோர் தொழில் இழக்கலாம் என அனுமானிக்கப்பட்டுள்ளது. மத்திய கிழக்கு நாடுகளில் தொழில் இழப்போரும் இதில் உள்ளடங்கும் பட்சத்தில் தொழில் இழந்தவர்களின் நிலைமை அபாயகரமான நிலைக்கு தள்ளப்படும்.

வெளிநாட்டு அந்நிய செலாவணி படிப்படியாக கரைந்து செல்கின்றது. இந்தப் பிரச்சினைகளை தீர்ப்பதற்காகக் கூறி 450 பில்லியன் ரூபா நிதி நாணயத்தாள்களை தேசிய பொருளாதாரத்தில் புழக்கத்தில் விடுவதற்கு ஆட்சியாளர்கள் செயற்பட்டதன் பிரதிபலனாக குழப்பமும், சிக்கல்களும் மேலும் அதிகரித்துள்ளன.

# முடிச்சுகளை
# தளர்த்துதல்

இந்த சிக்கல்கள் மற்றும் பிரச்சினைகளில் இருந்து நாடென்ற ரீதியில் நாம் வெளியே வரவேண்டும். சிக்கல்களின் முடிச்சுகளை அவிழ்க்க வேண்டும். அதற்கு தற்காலிக ப்ளாஸ்டர் தீர்வுகளோ அல்லது குறுகிய வழிகளோ இல்லை.

இந்த அபாயகரமான நிலைமையில் இருந்து மீள்வதற்கு நீண்டகால பரிபூரணத்துவமிக்க பொருளாதாரத் திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என தலைவர் ரணில் விக்கிரமசிங்க பல சந்தர்ப்பங்களில் ஆட்சியாளர்களுக்கு சுட்டிக்காட்டியுள்ளார். அதற்குத் தேவையான ஒத்துழைப்பை வழங்குவதாகவும் கூறினார்.

அவ்வாறான பின்புலத்தில் பரிபூரணமான பொருளாதார திட்டத்தை தயாரிப்பதற்கு ஆட்சியாளர்களால் முடியவில்லை.

## அது ஏன்?

அவர்களுக்கு தெளிவான பொருளாதாரக் கொள்கைகள் இல்லை. பொருளாதாரத்தை மீளக்கட்டியெழுப்பும் வழிமுறைகள் தொடர்பிலான யோசனைகள் இல்லை. சர்வதேச பொருளாதார சவால்களை எதிர்கொண்டு தேசிய பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு தைரியமில்லை. இதனை அவர்கள் மக்கள் மத்தியில் நிரூபித்துவிட்டனர். எதிர்காலம் இதைவிட பயங்கரமானது.

# முடிச்சுகளை அவிழ்ப்போம்

சுதந்திரத்தின் பின்னர் இந்த நாடு எதிர்நோக்கியுள்ள பாரிய பொருளாதார நெருக்கடிக்குள் நாமும் தள்ளப்பட்டுள்ளோம். இந்தப் பொருளாதார சிக்கலை நீக்கி பிரச்சினையைத் தீர்க்கும் வழிமுறை, திட்டம் மற்றும் தைரியம் என்பன ஐக்கிய தேசியக் கட்சிக்கு மாத்திரமே உள்ளது.

சீரற்ற முகாமைத்துவத்தால் தேசிய பொருளாதாரம் வீழ்ச்சியடைந்த 1977, 2001, 2015 ஆம் ஆண்டுகளிலும் உயிர்த்த ஞாயிறன்று மேற்கொள்ளப்பட்ட குண்டுத் தாக்குதல்களால் பொருளாதார வீழ்ச்சி ஏற்பட்ட 2018 ஆம் ஆண்டிலும் ஐக்கிய தேசியக் கட்சியே பொருளாதாரத்தை மேம்படுத்தியது.

வீழ்ச்சியடைந்த பொருளாதாரத்தை மீள உயிர்ப்பித்து ஒட்டுமொத்த சமூகத்தையும் பலப்படுத்துவது தொடர்பாக நாம் உங்களிடம் முன்வைக்கும் திட்டத்தின் சிறிய பதிவே இது. இதனை மிகுந்த அவதானத்துடன் வாசியுங்கள்.

இந்த திட்டம் ஊடாக உங்களுக்கும், உங்கள் பிள்ளைகளுக்கும், உங்கள் வீட்டுக்கும், உங்கள் தொழிலுக்கும், உங்கள் நிறுவனத்திற்கும், உங்கள் வியாபாரத்திற்கும், உங்கள் பொருளாதாரத்திற்கும் பலம், சக்தி, ஒளி கிடைக்கும் என உணர்ந்தால், ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து உங்கள் வாழ்வை பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

## முடிச்சுகளை அவிழ்த்து போடுதல்

நமது பொருளாதாரத்தை மீள உயிர்ப்பிக்கும் போது சில பிரிவுகள் தொடர்பாக அடிப்படை கவனத்தை செலுத்த வேண்டும். கொரோனா தொற்றினால் வீழ்ச்சியடைந்த உலக மற்றும் தேசிய பொருளாதாரம் அதில் ஒரு பிரிவு. இந்தப் பின்புலத்தை கவனத்திற்கொண்டே தேசிய பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் திட்டம் உருவாக்கப்பட வேண்டும்.

- கொரோனா இரண்டாம் அலை நாட்டில் பரவுவதை தடுப்பதற்கு முழுமையாக நாம் கவனம் செலுத்த வேண்டும். அவ்வாறு இரண்டாம் அலையாக நோய் பரவினால் மீண்டும் பொருளாதார வீழ்ச்சி ஏற்படும்.
- சர்வதேசத்தின் ஒத்துழைப்பை வென்றெடுக்க வேண்டும். தனிப்பட்ட அரசாங்கமாக இந்த சவாலை வெற்றிகொள்ள முடியாது.
- அதற்காக ஜனநாயகம், மனித உரிமைகள் மற்றும் சுதந்திரம் போன்றவை நூற்றுக்கு நூறு வீதம் பாதுகாக்கப்படல் வேண்டும்.
- எதிர்கால சந்ததியினர்க்கு நவீன அறிவு ஊட்டப்படல் வேண்டும். அப்போதுதான் நாட்டைக் கட்டியெழுப்பும் செயற்பாடுகளில் அவர்களின் திறமையை பயன்படுத்திக்கொள்ள முடியும்.
- இலங்கையர் எனும் அடையாளத்தை உறுதிப்படுத்தி ஐக்கிய, ஒரே இலக்குடைய, ஒற்றுமையான இனத்தை உருவாக்க வேண்டும். பிரிந்து சென்ற இனம், பிரிந்த சென்ற நாடாக இல்லாமல் ஐக்கிய இனம் மற்றும் ஒற்றுமையான நாடு என்பனவே எமக்கு வேண்டும்.

# முடிச்சை அவிழ்க்கும் வழிமுறை

இன்று நாம் எதிர்நோக்கியுள்ள உண்மையான நிலைமை குறித்து முதலில் தெளிவடைய வேண்டும். நோயை சரியான முறையில் அடையாளம் காணாமல் வழங்கப்படும் மருந்துகளால் குணமடைய முடியாது.

வெளிநாட்டு வருமானங்களின் மூலம் நாட்டுக்கு கிடைக்கும் 7000 மில்லியன் அமெரிக்க டொலர் வருவாயை நாம் இந்த வருடம் இழக்கக்கூடும். கடன் மற்றும் சேவைகளுக்காக இந்த வருடம் 5000 மில்லியன் அமெரிக்க டொலரை செலுத்த வேண்டும்.

இதனால் அடுத்த இரண்டு வருடங்களில் 6000 மில்லியன் அமெரிக்க டொலரை தேசிய பொருளாதாரத்துக்கு சேர்க்க வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி மதிப்பிட்டுள்ளது. அடுத்த வருடத்தில் குறைந்தபட்சம் 3000 மில்லியன் அமெரிக்க டொலர் தேவைப்படும்.

உலகில் பெரும்பாலான நாடுகள் சர்வதேசத்தின் ஒத்துழைப்புடன் தத்தமது நாடுகளின் பொருளாதாரத்தை மீள உயிர்ப்பிப்பதற்கு தேவையான நிதியை திட்டமிட்டுள்ளன. பாகிஸ்தான், நேபாளம், பங்களாதேஷ், மியன்மார், ஆப்கானிஸ்தான், மாலைதீவு, எகிப்து மற்றும் கென்யா உள்ளிட்ட நாடுகள் தற்போதைக்கு சர்வதேச நாணய நிதியத்தில் ஒத்துழைப்பைப் பெற்றிருப்பதனை அதற்கு உதாரணமாக சுட்டிக்காட்ட முடியும்.

எனினும், இலங்கையால் எந்தவொரு சர்வதேச ஒத்துழைப்பையும் பெற்றுக்கொள்வதற்கு இதுவரை முடியாது போயுள்ளது. நாட்டை ஆட்சி செய்யும் ஆட்சியாளர்களால் பொருளாதாரக் கொள்கைகளோ அல்லது திட்டங்களோ இல்லாததன் காரணமாக தெளிவற்ற நிர்வாக முறைமையால் நாம் சர்வதேசத்திலிருந்து தனிமைப்படுத்தப்பட்டுள்ளோம்.

பொருளாதாரத்தை மீள உயிர்ப்பதனை கருத்திற்கொண்டு சர்வதேச ஒத்துழைப்பு மற்றும் தேசிய கொள்கையின் ஊடாக இதற்கான நிதியை பெற்றுக்கொள்ளும் வல்லமை ஐக்கிய தேசியக் கட்சிக்கு மாத்திரமே உள்ளது.

- சர்வதேச நாணய நிதியம் மற்றும் வேறு வழிகளின் ஊடாக 6000 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியைப் பெற்றுக்கொள்ள நாம் எதிர்பார்க்கிறோம்.
- தற்போதைய ஆட்சியாளர்களின் முரண்பாடான செயற்பாடுகள் காரணமாக ஜப்பான் மற்றும் ஜய்கா நிறுவனத்துடனான தொடர்புகள் வீழ்ச்சியடைந்துள்ளன. நமது நட்பு வெளிநாட்டுக் கொள்கைகள் ஊடாக இந்தத் தொடர்புகளை மீள உறுதிசெய்ய முடியும்.
- பொருளாதாரத்தை மீளக்கட்டியெழுப்பும் திட்டத்தின் ஊடாக நாம் ஜப்பான் போன்று போட்டிமிக்க திட்டத்தை உருவாக்க திடசங்கற்பம் பூண்டுள்ளோம். போட்டிமிக்க வர்த்தகங்களை வலுப்படுத்தி புதிய விதத்தில் தொழில்கள் மற்றும் சேவைகளை விஸ்தரித்தல்.

நாம் பெற்றுக்கொண்ட கடன்களை செலுத்தக்கூடிய வலுவான பொருளாதாரத்தை அப்போதே உருவாக்க முடியும்.

# பிரச்சினைகளின் முடிச்சுகளை அவிழ்க்கும் திட்டம்

பொருளாதார நெருக்கடிகளால் சிரமப்படும் மக்களை அதிலிருந்து விடுவித்துக் கொள்வதற்கு அவர்களின் கரங்கள் பலப்படுத்தப்பட வேண்டும். தொழில்கள் பாதுகாக்கப்பட வேண்டும். சுயதொழில் வருமானங்கள் பாதுகாக்கப்பட வேண்டும். தொழில் இழந்தவர்களை பாதுகாத்துக் கொள்ள வேண்டும். அதற்கு இணையான வருமான வழிகள் உருவாக்கப்பட வேண்டும்.

• கொவிட்-19 தொற்றின் பாதிப்பாக ஒரு மில்லியனுக்கும் மேற்பட்டோர் தொழில்களை இழக்கலாம் என கணிக்கப்பட்டுள்ளது. சமீபத்தில் தொழில் இழந்த சகலருக்கும் 10000 ரூபா மாதாந்தக் கொடுப்பனவாக வழங்கப்படும். வெளிநாடுகளில் தொழில்களை இழந்து நாடு திரும்புவோருக்கும் இந்த நிவாரண உதவித் தொகை வழங்கப்படும்.

- அரசாங்கத் தொழிலில் இடைநிறுத்தப்பட்டுள்ள சகல கொடுப்பனவுகளும் மீள வழங்கப்படும்.
- என்டர்பிறைசஸ் ஸ்ரீ லங்கா யோசனை முறைமையின் கீழ் 50 மில்லியனுக்கு குறைந்த கடன் பெற்றவர்களுக்கும் கடனை திருப்பி செலுத்துவதற்கான சலுகைக்காலம் வழங்கப்படும்.
- சமூகத்தில் பாதிக்கப்படும் ஏழைக் குடும்பங்களுக்கு 10000 ரூபாய்க் கொடுப்பனவு வழங்கப்படும்.
- இலங்கையில் சகல தொழில்முயற்சியாண்மைகளும் பாதுகாக்கப்படும்.

அதற்காக

வர்த்தக சந்தையில் காத்திரமான செயற்றிட்டங்கள் மற்றும் ஆபத்தான நிதி செயற்றிட்டங்கள் ஆகியன சர்வதேச நிதி கூட்டுத்தாபனத்தின் ஊடாக தனியார் துறைகளுக்கு வழங்கப்பட்டு நிதி பெற்றுக்கொள்ளப்படும்.

கொவிட்-19 ஆசிய அபிவிருத்தி வங்கியின் 20 பில்லியன் அமெரிக்க டொலர் நிவாரண செயற்திட்டம், அத்தகைய சமாந்தரமான செயற்திட்டம் ஊடாக ஒத்துழைப்பை பெற்றுக் கொள்வதற்கு மேலதிகமாக அரசாங்கம் ஊடாக தனியார் வியாபாரங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கும் செயற்திட்டமும் முன்னெடுக்கப்படும்.

இந்த நிதியங்கள் மற்றும் செயற்திட்டம் ஊடாக சிறு மற்றும் நடுத்தர தொழில்முனைவோர்கள், சிறு தொழில்முனைவோர்கள் மற்றும் சுயதொழில் தொழில்முனைவோர்களை பலமாக்குவோம். அதற்கான நிதி உதவிகள் மற்றும் கொடுக்கல் வாங்கல்களை செய்வதற்கு நீண்ட கால அரச பிணை முறிகளை அந்த தொழில்முனைவோர்களுக்கு வழங்குவோம்.

- தனியார் துறையினருக்கு சம்பளம் வழங்குவதற்கு இதன் பங்களிப்பை பெறலாம்.
- ஏற்றுமதி துறைக்கு வழங்கும் ஒத்துழைப்பும் இந்த திட்டத்தில் உள்ளடங்கும். மூழ்கிய நிலையிலுள்ள சர்வதேச சந்தையை மீள வெற்றி கொள்வதற்கு விசேட பெக்கேஜ்கள் அறிமுகப்படுத்தப்படும். கொள்வனவாளர்களது நிபந்தனைகளை சந்திப்பதற்கும், புதிய சந்தைகளை கண்டு பிடிப்பதற்கும் ஒத்துழைப்பு வழங்கப்படும்.

- சுற்றுலாத் துறையின் ஹோட்டல்கள், தனிப்பட்ட வீட்டு அறைகள், சிற்றுண்டிச்சாலைகள் மற்றும் சுயதொழில் செய்யும் நபர்கள் மற்றும் தொழில்முனைவோர்களை பலமாக்கும் பெக்கேஜ்கள் அறிமுகப்படுத்தப்படும். சுற்றுலா சந்தைக்கு மீள பிரவேசிப்பதற்கு, ஊழியர்களை மீள் பயிற்சிக்கு உட்படுத்த மற்றும் தொழில்முனைவோர்களது நிலைமையை மேம்படுத்துவதற்கு இதன்மூலம் சக்தியை பெற்றுக்கொள்ளலாம்.
- முச்சக்கர வண்டி உரிமையாளர்கள் லீசிங் நிறுவனங்களுக்கு செலுத்த வேண்டிய கடன் தவணையை செலுத்த நிவாரண காலம் வழங்கப்படும்.
- கொவிட்-19 காரணமாக வியாபாரங்கள் வங்குரோத்து நிலையடைவதை தடுப்பதற்கான புதிய சட்டங்கள் தயாரிக்கப்படும்.
- அரசாங்கம் பெற்ற அனைத்து சேவைகள் மற்றும் ஒப்பந்தங்களுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

உள்ளூர் பொருளாதாரத்தை சர்வதேச ரீதியாக உயர்த்தவே நாம் எப்போதும் முயற்சிக்கின்றோம். இலங்கையின் தொழில்முயற்சிகள், கைத்தொழில்கள் மற்றும் உற்பத்திகளை உலக மட்டத்திற்கு கொண்டு செல்லும் செயற்திட்டத்தை நாம் ஆரம்பிப்போம்.

புதிய தொழில்கள் மற்றும் வருமான வழிகளை உருவாக்குவதற்கு பிங்கிரிய 2 மற்றும் ருகுனு சுதந்திர வர்த்தக வலயங்களை ஸ்தாபிப்போம். ஜப்பான், இந்தியா, சீனா போன்ற பாரிய உற்பத்தி கைத்தொழில் இராஜ்ஜியங்களுக்காக விசேடமாக ஒதுக்குவது எமது எதிர்ப்பார்ப்பாகும்.

- நவீன வசதிகள் கொண்ட சுற்றுலா வலயங்கள் இரண்டை ஸ்தாபிப்போம்.

- தகவல் தொழில்நுட்ப தொழில்துறையை மேம்படுத்துவோம். தகவல் தொழில்நுட்ப துறையின் உற்பத்திக்கான வெளிநாட்டு சந்தையை வென்றெடுப்போம். உயர்தர உற்பத்தி பொருட்களை சந்தைக்கு தயாரிக்கும் நிறுவனங்களுக்கு விசேட நிதி வசதிகளை வழங்குவோம். அத்தகைய நிறுவனங்களுக்கு சலுகை மற்றும் நீண்ட கால கடனுதவிகளை வழங்குவோம்.

- ஏற்றுமதி துறையை ஊக்குவிப்போம். தற்போதைய அரசாங்கத்தின் இறக்குமதி வரையறைகள் காரணமாக ஏற்றுமதி துறைக்கு தேவையான மூலப்பொருட்களை கொண்டு வருவது சிக்கலாகியுள்ளது. நாம் இந்த நிலைமையை மாற்றுவோம். ஏற்றுமதிக்கு விதித்துள்ள வரையறைகளையும் நீக்க நாம் நடவடிக்கை எடுப்போம்.

# அனைத்து பிரஜைகளுக்கும் வீடு, காணி.

நாட்டின் அனைத்து பிரஜைகளுக்கும் வீடு மற்றும் காணி உரிமையை வழங்க துரிதமாக திட்டங்களை முன்னெடுப்போம்.

- குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட குடும்பங்களுக்கு வீடொன்றின் உரிமையை பெற்றுக்கொள்ள சலுகை வட்டிக்கு நீண்ட கால கடன் வழங்கப்படும்.
- இதன்மூலம் நிர்மாணத்துறைக்கு புதிய மறுமலர்ச்சி கிடைக்கும். இரண்டு கட்டங்களாக பத்து இலட்சம் வீடுகள் அமைக்க திட்டமிடப்படும்.
- காணிகளின் உரிமையை மக்களுக்கு வழங்கும் செயற்திட்டம், அதற்காக வழங்கப்பட்டுள்ள உயர்நீதிமன்ற தீர்ப்பிற்கு அமைவாக மற்றும் தற்போதைய சட்ட திட்டங்களின் கீழ் முன்னெடுக்கப்படும் என்பதுடன், பிற்காலத்தில் புதிய சட்டங்கள் இயற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.

# விவசாய மற்றும் மீன்பிடி புரட்சி

சர்வதேச மற்றும் வலய தேவைகளை கருத்திற்கொண்டே நாம் உள்ளூர் விவசாய கைத்தொழிலை மேம்படுத்தினோம். 2050 ஆம் ஆண்டில் இந்து சமுத்திரத்தை சூழ 500 மில்லியன் மேலதிக சனத்தொகை உருவாகக்கூடும். அந்த சனத்தொகைக்கு தேவையான உணவு உற்பத்தி செய்வது எமது விவசாய கைத்தொழிலின் நீண்டகால இலக்கு. அதற்கமைய விவசாயத்தை அதியுயர் நவீன மற்றும் போட்டி நிறைந்த வகையில் உயர்த்துவாற்கு நாம் நடவடிக்கை எடுப்போம்.

- ஏற்றுமதி போகங்களை பயிரிட ஒரு மில்லியன் ஏக்கர் இடங்களை புதிதாக பயிர் நிலமாக மாற்றுவோம்.
- விவசாயிற்கு கிடைக்கும் வருமானத்தை அதிகரிக்க கிராமிய பொருளாதாரத்தை மேம்படுத்துவோம். கிராமச் சந்தை எண்ணத்தை பலப்படுத்துவோம். விவசாய மற்றும் மீன்பிடி உற்பத்திகளுக்கான களஞ்சிய மற்றும் குளிர்சாதன வசதிகளை விரிவாக்குவோம்.
- விவசாய மற்றும் மீன்பிடி உற்பத்தி விநியோக வலையமைப்பை அத்தியாவசிய சேவையாக நடத்திச் சென்று எந்நேரத்திலும் உற்பத்தியாளர்களுக்கு சிறந்த விலையை உறுதிப்படுத்துவோம்.
- தட்டுப்பாடின்றி உரத்தை வழங்க நடவடிக்கை எடுப்போம்.
- நெல் பயிர்ச்செய்கையின் செயற்திறன், தரம், போட்டித்தன்மையை பாதுகாத்து, அரிசி ஏற்றுமதி செய்வதை நோக்காக கொண்டு “தான்யாகாரய” செயற்திட்டத்தை முன்னெடுப்போம்.
- கீழ் மல்வத்து ஒய செயற்திட்டத்தை ஆரம்பிப்போம்.
- மீன்பிடி தொழிலை நவீனமயப்படுத்த தேவையான தொழில்நுட்பம், உபகரணங்கள் மற்றும் வசதிகளை மீனவர்களுக்கு வழங்குவோம்.
- மீன்பிடித்துறை ஏற்றுமதி துறையாக மேம்படுத்தப்படும்.
- சுற்றாடலுக்கு நேயமான விவசாய உற்பத்திகளுக்காக உலக வங்கி, சர்வதேச சுற்றாடல் வசதி, சர்வதேச நிதி ஒத்துழைப்பு ஆகிய நிறுவனங்களிடமிருந்து நிதி வசதிகளை பெற்றுத் தருவோம்.
- அரை ஏக்கர் முதல் 25 ஏக்கர் வரையிலான சிறு வன போகங்களை ஆரம்பிப்போம்.

# இலங்கைக்கு எதிர்காலம்.

இலங்கையை இந்து சமுத்திரத்தின் செயற்பாட்டு கேந்திர நிலையமாக அபிவிருத்தி செய்வதற்கே ஐக்கிய தேசியக் கட்சி எப்போதும் செயற்பட்டது. அந்த நோக்கத்தை கொண்டே கொழும்பு வலயத்தை நிதி மத்திய நிலையமாக்குவதற்கு நிதி நகர சட்டம் கொண்டு வரப்பட்டது.

இந்த நோக்கத்திற்காக உருவாக்கப்படும் புது சட்டமூலங்கள் இதோ.

- பொருளாதார மற்றும் நிதி (விசேட விதானங்கள்) சட்டமூலம்.
- பொருளாதாரத்தை மீள மேம்படுத்தும் சட்டமூலம்.
- அபிவிருத்தி சட்டமூலம்.
- விவசாய (நவீனமயப்படுத்தல்) சட்டமூலம்.
- கடன் மற்றும் வங்குரோத்து நிலை தொடர்பான (விசேட விதானங்கள்) சட்டமூலம்.
- வெளிநாட்டு நிதி மற்றும் சேவை சட்டமூலம்.

# கொரோனா பயமுறுத்தலைத் தடுத்தல்

பொருளாதார சரிவை தடுத்தல், மீள புத்துயிர் அளித்தல் மற்றும் மேம்படுத்த நடவடிக்கை எடுக்கும் அதேநேரம், கொரோனா தொற்றின் இரண்டாவது அல்லது மூன்றாவது அலை ஊடாக ஏற்படும் பொருளாதார வீழ்ச்சிகளை உயர்ந்தபட்சமாக குறைப்பது எவ்வாறு என்பதே எமது அடிப்படை நோக்கமாக அமையும்.

- நாளொன்றுக்கு பிசிஆர் பரிசோதனைகள் 5,000 ஐ மேற்கொள்ளல்.
- பாடசாலைகள், உயர் கல்வி நிறுவனங்கள் மற்றும் வேறு சேவைகளுக்கு தேவையான முகக்கவசங்கள் குறைந்தபட்சம் 10 மில்லியன் விநியோகித்தல்.
- 2,000 வென்டிலேட்டர்களை பெற்றுக்கொள்ளல்.
- தனிமைப்படுத்தப்படல் மற்றும் பாதுகாப்பிற்கு தேவையான புதிய செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.
- இந்த செயற்திட்டத்திற்கு பங்களிப்பு வழங்கும் எவராவது துரதிர்ஷ்டவசமாக உயிரிழந்தால், யுத்தத்தில் உயிரிழந்த பாதுகாப்பு படையினருக்கு வழங்கப்படுவது போன்று விசேட நட்டஈட்டுத் தொகையை வழங்குதல்.
- பிபிஈ ஆடைகள் கிடைக்க வழி செய்தல்.
- தொற்று நோய் ஆய்வுகூடங்களை ஸ்தாபித்தல் .
- தொற்று நோய் கட்டுப்பாட்டிற்கு தேவையான அதிகாரங்கள் மற்றும் சமூக முடக்கத்தை சட்டமயமாக்கும் மக்கள் சுகாதார (அவசர) சட்டமூலத்திற்கு ஒப்புதல் அளித்தல்.

இத்தகைய தொற்று நோய்கள் ஏற்படுவதற்கு சுற்றாடலை அழிப்பது ஒரு பிரதான காரணம் என ஐக்கிய நாடுகள் அமைப்பும், உலக சுகாதார அமைப்பும் சுட்டிக்காட்டுகின்றன.

நிலையான அபிவிருத்தி சட்டமூலத்தை திருத்தி, சுற்றாடல் பாதுகாப்பு திட்டங்களை மென்மேலும் பலப்படுத்துவோம். முறைசாரா விவசாய

செயற்பாடுகள் காரணமாக சுற்றாடல் அழிவதை தடுப்பதற்கு சட்டங்கள் அறிமுகப்படுத்தப்படும். காலநிலை மாற்றத்திற்கான சுற்றாடல் அழிவுகளுக்கு முற்றுப்புள்ளி வைப்போம்.

சுகாதாரத்துறையை மேலும் பலமாக்குவதற்கு நாம் திட்டங்களை தீட்டியுள்ளோம்.

- சுவசெரிய இரண்டாம் கட்டத்தை ஆரம்பித்தல். மேல் மாகாணத்தில் நகர் அண்மித்த பகுதிகளில் நிறைவு உண்டாக்குகின்ற வைத்திய சேவைகள் இதன் கீழ் ஸ்தாபிக்கப்படும் என்பதுடன், அவர்களது பயண இலகுவிற்காக மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்படும்.

- விமான சத்திர சிகிச்சையகங்கள் மற்றும் விமான வைத்தியசாலை நிர்மாணிக்கப்படும். பாரிய ஹெலிகொப்டர்களில் இந்த வசதிகள் ஸ்தாபிக்கப்படுவதுடன் கிராமிய மற்றும் பின்தங்கிய பிரதேசங்களுக்காக அவசர தேவைகளின்போது விமான சுகாதார சேவைகள் மக்களுக்கு வழங்கப்படும்.

## பாடசாலை பாதுகாப்பு

எதிர்காலத்தை சிறப்பாக்க பாடசாலை கல்வி தொடர்பாக முதன்மையாக கவனத்தை செலுத்த வேண்டியது அத்தியாவசியமானது.

நிகழ்கால சூழலில் கல்வி பொதுத் தராதர உயர்தர பரீட்சையை நடத்துவது தொடர்பாக மீள சிந்திக்க வேண்டும் என்பதே எமது எண்ணம். பாாடசாலை ஆசிரியர் சங்கங்கள் உட்பட ஏனைய தரப்பினருடன் கலந்துரையாடி உயர்தர பரீட்சை நடத்துவது தொடர்பாகவும் காலகட்டம் தொடர்பாகவும் தீர்மானிக்கப்படும்.

தனியார் துறையினருக்காக வழங்கப்படும் நிதி நிவாரணம் மற்றும் ஒத்துழைப்பினை தனியார் பாடசாலைகளுக்கும் வழங்குவோம்.

13ம் தர மாணவ மாணவிகளுக்கு மடி கணினிகளை வழங்கும் செயற்திட்டத்தை உடனடியாக செயற்படுத்துவோம்.

பாடசாலைகளை மீள ஆரம்பிப்பது தொடர்பில் மிகவும் நடைமுறைசாத்தியமான மற்றும் பாதுகாப்பான திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவோம். இதன்போது தற்காலிக கட்டிடங்கள் மாத்திரமல்லாது, பாடசாலையை சூழவுள்ள வெற்றுக் கட்டிடங்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்படும்.

## பெண்கள் சக்தி

பெண்களின் சக்தியை இதனை விடவும் பரந்தளவில் நாட்டின் முன்னேற்றத்திற்காக பயன்படுத்தும் செயற்றிட்டமொன்றை நடைமுறைப்படுத்துவோம்.

- மாகாண சபைகளில் 25% பெண் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்துவோம்.
- அரச நிறுவனங்கள், சபைகளில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதற்கான ஐந்தாண்டு திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படும்.

# சர்வதேச உறவுகள்

சர்வதேச விவகாரங்கள், பல்வேறு வகையிலான சர்வதேச ஒத்துழைப்புக்கள், சர்வதேச நெருக்கடிகளுக்கான தீர்வு மற்றும் சிறிய நாடுகளின் இறைமையை வலுப்படுத்துவதற்கு சர்வதேச அமைப்புக்களின் பங்களிப்பு தீர்மானமிக்கதாகும்.

இதனைப் புரிந்துகொண்ட ஐக்கிய தேசியக் கட்சி சுதந்திரத்திற்கு பின்னர் பொதுநலவாய நாடுகள், ஐக்கிய நாடுகள் சபை, சார்க் அமைப்பு உள்ளிட்ட பல சர்வதேச அமைப்புக்களுடன் கைகோர்பதற்கு நடவடிக்கை எடுத்தது. இதன் மூலம் கொழும்புத் திட்டம், ஆசிய வலு சம்மேளம், ஆப்ரோ ஆசிய மாநாடு, அணிசேரா மாநாடு, ஐக்கிய நாடுகளின் சமுத்திர மாநாடு போன்ற பல அமைப்புக்களில் குறிப்பிடத்தக்களவு பங்களிப்பை வழங்குவதற்கான வாய்ப்பு இலங்கைக்கு கிட்டியது. நாம் அந்த அமைப்புக்களுடன் இணைந்து எதிர்காலத்திலும் செயற்பட வேண்டும். உலகில் எந்தவொரு நாடும் ஐக்கிய நாடுகள் சபையைவிட்டுச் சென்றதில்லை. நாமும் இந்த கொள்கையை எதிர்காலத்திலும் கடைப்பிடிப்போம்.

2001-2004 மற்றும் 2015-2019 ஆண்டுக் காலப் பகுதிகளில் நாமும் அனைத்து நாடுகளுடனும் மகத்தான மற்றும் நட்புறவுடன் கூடிய இராஜதந்திர தொடர்புகளை பேணினோம். இந்தியா, சீனா, ஜப்பான், தென் கொரியா, வியட்நாம், அமெரிக்கா, கனடா, பிரித்தானியா உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகள், ரஷ்யா, மத்திய கிழக்கு நாடுகள், தெற்காசிய நாடுகள், பிம்ஸ்டெக் மற்றும் ஆசிய அமைப்பில் அங்கம் வகிக்கும் நாடுகள், கென்யா, தென் ஆபிரிக்கா ஆகிய நாடுகள் எமது நட்பு நாடுகள் பட்டியலில் அடங்கியிருந்தன.

இந்து சமுத்திரத்தின் போக்குவரத்து சுதந்திரத்தை பாதுகாப்பதற்கான முன்னோடிப் பணியை நாமே நிறைவேற்றினோம். இரு தரப்பு மற்றும் பல தரப்பு உடன்படிக்கைகள் மூலம் இலங்கையின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கான ஒத்துழைப்பை பல்வேறு நாடுகளிடமிருந்து நாம் பெற்றுக்கொண்டோம்.

எதிர்காலத்தில் தெற்காசியா மற்றும் வங்காள விரிகுடாவை அண்மித்த நாடுகளுடன் பொருளாதார ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவோம்.

# ஜனநாயக ஆட்சி

அரசாங்கம் அதிகார துஷ்பிரயோகம் செய்யப்படும் சந்தர்ப்பத்தினை சுயாதீன ஆணைக்குழுக்கள் ஊடாக கடும் விதிமுறைகளுக்குள் உட்படுத்த எம்மால் முடிந்தது. இதனால் நீதிமன்றம், அரச நிர்வாகம், பொலிஸ் மற்றும் தேர்தல்கள் ஆகிய துறைகளில் சுயாதீனத்தன்மை மேலும் உறுதிபடுத்தப்பட்டது. இந்த சுயாதீனத்தன்மையை எதிர்காலத்திலும் நாம் பாதுகாப்போம்.

ஜனாதிபதி பதவியில் உள்ள நிறைவேற்று அதிகாரங்களை இல்லாதொழிப்பதற்காக தொடர்ந்தும் நாம் முன்னிற்போம்.

# அரச நிர்வாகம்

அரசியல்வாதிகள், அரசியல் கட்சிகள், பாராளுமன்றம் மற்றும் அரசாங்கம் தொடர்பில் மக்கள் கொண்டிருந்த நம்பிக்கை சீர்குலைந்துள்ளது. பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவம் செய்யும் 225 பேரையும் தியவன்னா ஓயாவிற்குள் தள்ளிவிட வேண்டும் என பெரும்பாலானவர்கள் கூறும் அளவிற்கு அரசியல்வாதிகளுக்கும் பொது மக்களுக்கும் இடையிலான இடைவெளி வலுவடைந்துள்ளது. அற்றுப்போயுள்ள நம்பிக்கையை மீளவும் நாம் உறுதிப்படுத்த வேண்டும். இல்லையேல் அது ஜனநாயகத்தின் இருப்பை கேள்விக்குறியாக்கும்.

ஐக்கிய தேசியக் கட்சி இதனை உணர்ந்துள்ளது. இந்த நிலைமையை திருத்துவதற்கே நாம் பாடுபடுகின்றோம். பல வருடங்களாக ஒரே இடத்தில் தேங்கி சீரழிந்த முகங்கள் தற்போது எமது கட்சியில் இல்லை. புதிய சந்ததியினருக்கு கட்சியில் வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. தொழில்சார் நிபுணர்கள் மற்றும் கட்சி செயற்பாட்டாளர்கள் பலர் இம்முறை தேர்தலில் களமிறங்கியுள்ளனர்.

# சிறந்த பெறுபேற்றினை அடைவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி

பிரித்தாளுதலையும், தனிப்பட்ட நிகழ்ச்சி நிரலையும் முன்னிலைப்படுத்தி இன்று அநேகமான அரசியல்வாதிகளும் அரசியல் கட்சிகளும் செயற்படுவதைக் காண முடிகின்றது. கொரோனா தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடி தேசத்தையே அச்சுறுத்தும் இந்த தருணத்திலும் அநேகமான அரசியல் கட்சிகள் குரோத அரசியலில் ஈடுபடுகின்றன.

ஐக்கிய தேசியக் கட்சி அவ்வாறில்லை. நமது கட்சி அனைத்து சந்தர்ப்பங்களிலும் நாட்டை முன்னிலைப்படுத்தி செயற்படுகின்ற தேசப்பற்றுள்ள அரசியல் கட்சியாகும்.

அந்த கடந்தகால அனுபவத்துடன் நாம் கீழ் காணும் திட்டங்களை நடைமுறைப்படுத்துவோம்.

- 2020 ஆம் ஆண்டில் பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து அரசியல் கட்சித் தலைவர்கள் மற்றும் ஜனாதிபதியை உள்ளடக்கிய மாநாடு ஒன்றை மாதாந்தம் நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்நடவடிக்கையானது புத்த பகவானின் லிச்சவி இராஜ நிர்வாக கொள்கையினை அடிப்படையாகக் கொண்டதாகும். அரசாங்கத்தின் அனைத்து முக்கிய தீர்மானங்களும் இந்த மாநாட்டில் கலந்துரையாடப்படும்.

# அரச நிர்வாக செயற்பாடுகளை மறுசீரமைத்தல்.

- அரச நிர்வாக சேவைகள், தொழில்நுட்ப நிபுணத்துவம், ஆலோசனை மற்றும் கூட்டுத்தாபன நிறைவேற்று அதிகாரிகள் அங்கம் வகிக்கும் அமைப்பு ஊடாகவே அரச நிர்வாகம் வழிநடத்தப்படும்.

- இராணுவ நடவடிக்கைகளை வழிநடத்தும் பொறுப்பு தொழில்சார் இராணுவ அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படும்.

- பொலிஸ் சேவையின் நடவடிக்கைகள் அனைத்தும் சுயாதீன பொலிஸ் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படுகின்ற பொலிஸ் அதிகாரிகள் ஊடாகவே முன்னெடுக்கப்படும்.

- அரச நிர்வாக நடவடிக்கைகள் அரசியல் மயமாவதற்கும், இராணுவ மயமாவதற்கும் ஐக்கிய தேசியக் கட்சி இடமளிக்காது.

பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களின் ஒழுக்கத்தை பாதுகாப்பதற்காக பாராளுமன்றத்தில் பின்பற்றப்பட வேண்டிய தரங்கள் தொடர்பிலான சட்டத்தை நிறைவேற்றுவோம். பாராளுமன்ற பிரதிநிதிகளுக்கு எதிராக கிடைக்கும் முறைபாடுகள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு பாராளுமன்ற தரங்கள் தொடர்பிலான சுயாதீன ஆணையாளர் ஒருவரை நியமிப்போம்.

பாராளுமன்ற தேர்தல் முறைமை காரணமாக ஊழல் வலுப்பெற்றுள்ளதென்பது மக்களின் கருத்தாகும். இந்த நிலைமையை இயன்றளவு தணிப்பதற்காக

கீழ்காணும் நடவடிக்கைகளை மேற்கொள்வோம்.

- விருப்பு வாக்கு முறைமையை இரத்துச் செய்தல்

- தொகுதி முறைமை மற்றும் விகிதாசார முறைமையின் கலப்பு முறைமையின் ஊடாக 225 பாராளுமன்ற உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கான நடைமுறையை தயாரித்தல்

- தேர்தல்களின்போது அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்கள் மேற்கொள்ளும் செலவுகளை கட்டுப்படுத்துவதற்கான சட்டங்களை நிறைவேற்றுதல். தற்போது இத்தகைய சட்டங்கள் அமுலில் உள்ள பிரித்தானியா உள்ளிட்ட வேறு சில நாடுகள் நிறைவேற்றியுள்ள சட்டங்கள் மற்றும் அனுபவங்கள் இதன்போது முன்மாதிரியாகக் கொள்ளப்படும்.

# ஒரு தாய் பிள்ளைகள்

இலங்கையின் ஐக்கியத்தன்மை இற்றைக்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே வீழ்ச்சி கண்டது. கோட்டை அரசில் ஆட்சிப்புரிந்த ஆறாவது பராக்கிரமபாகு மன்னனின் கீழ் 22 வருடங்கள் நாடு ஐக்கியப்பட்டு இருந்தாலும் அதன் பின்னர் அனைத்து காலப் பகுதியிலும் இலங்கை பிளவுபட்ட பல்வேறு ஆட்சிகளின்கீழ் நிர்வகிக்கப்பட்டது.

இலங்கையை மீண்டும் ஒற்றை ஆட்சியாக ஐக்கியப்படுத்தியமைக்கான பெருமை 1948 ஆம் ஆண்டு அமரர் டி.எஸ். சேனாநாயக்க அவர்களின் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சிக்கு உரித்தானது. இதற்கான அடித்தளத்தையிடும் வகையில் 1946 ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சியை ஸ்தாபித்த அமரர் டி.எஸ். சேனாநாயக்க, சிங்களவராக இருக்கட்டும், தமிழராக இருக்கட்டும், முஸ்லிம்களாக இருக்கட்டும், மலே அல்லது பறங்கியராக இருக்கட்டும் இத்தருணம் முதல் இலங்கை தேசம் மீள ஆரம்பமாகின்றது என முழக்கமிட்டார்.

இலங்கையின் தனித்துவத்தை பாதுகாப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சியில் உள்ள நாம் உயிரையும் துச்சமாக கருதி செயற்படுவதற்கு கட்டுப்பட்டுள்ளோம்.

அதன் அடிப்படையில் ஐக்கிய தேசியக் கட்சியின் அரசாங்கத்தின்கீழ்

- அனைத்து உயிரினங்களையும் ஒரே விதமாக கருத வேண்டும் என்ற புத்த பகவானின் போதனையை அடிப்படையாக கொண்டு சட்டத்தின் முன் அனைவரும் சமமாக நடத்தப்படுவர்.

- பௌத்த சமயத்திற்கு முன்னுரிமை கிடைப்பதுடன் அதனை பாதுகாத்து போஷிக்கும் பொறுப்பை அரசாங்கம் ஏற்கும். பிரஜைகளின் விருப்பத்திற்கு ஏற்ப தாம் விரும்பிய மதத்தை பின்பற்றுவதற்கு உள்ள உரிமையை அரசாங்கம் பாதுகாக்கும்.

- தத்தமது கலாசாரங்களை பாதுகாத்து உறுதிப்படுத்தும் உரிமை பிரஜைகளுக்கு உள்ளது.

- மனித சுயகௌரவம் பாதுகாக்கப்படும்.

- தேசிய இனப்பிரச்சனைக்கு எமது தீர்வானது, பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் நடைப்பெற்ற கலந்துரையாடல் மற்றும் அதன் பின் நடைப்பெற்ற கலந்துரையாடலில் ஏற்றுக்கொண்ட தீர்மானங்களுக்மையவே நடைமுறைப்படுத்தப்படும்.

# ஆகவே சிந்தியுங்கள்...

ஐக்கிய தேசியக் கட்சியை தவிர்ந்த,
உங்களையும் நாட்டையும் உயர்த்துவதற்கான
இயலுமை உள்ள வேறு ஒரு கட்சி உள்ளதா?

---

ஐக்கிய தேசியக் கட்சியை தவிர்ந்த,
உங்களையும் நாட்டையும் பாதுகாக்கக்கூடிய
வேறு ஒரு கட்சி உள்ளதா?

---

ஐக்கிய தேசியக் கட்சியை தவிர்ந்த,
உங்களதும் நாட்டினதும் எதிர்காலத்தை
கட்டியெழுப்பக்கூடிய வேறு ஒரு கட்சி
உள்ளதா?

## தீர்மானம் உங்கள் கையில்...